# தூத்துக்குடி முதல் ஆறுமுகநேரி வரை அகல இரயில் பாதை அமைக்க வேண்டும்!

## ஒன்றிய இரயில்வே துறை அமைச்சருக்கு அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. கோரிக்கை!



தூத்துக்குடி, ஜூலை 23 -

ஆறுமுகநேரி இரயில் நிலையம் தூத்துக்குடியிலிருந்து சுமார் 27 கி.மீ. தொலைவில் உள்ளது. திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்கு ஆறுமுகநேரி வழியாக அகல இரயில் பாதையில் இரயில் போக்குவரத்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் சுவாமி தரிசனம் செய்ய ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினமும் வருகின்றனர். தூத்துக்குடி திருச்செந்தூர் சாலை மார்க்கத்தில் தான் பெருவாரியான பயணங்கள் நடைபெறுகிறது. இது சாலைப் போக்குவரத்தில் அதிகமான நெருக்கடியை ஏற்படுத்துகிறது.

இந்நிலையில் தூத்துக்குடி முதல் திருச்செந்தூர் வரை இரயில் பயணத்திற்கு வழிவகை செய்வது மிக அவசியமாகிறது. இதற்கு ஏதுவாக தூத்துக்குடியிலிருந்து ஆறுமுகநேரி வரை 27 கி.மீ. தொலைவில் அகல இரயில் பாதை அமைக்க வேண்டுமென ஒன்றிய இரயில்வே துறை அமைச்சருக்கு கோரிக்கை மனு வழங்கப்பட்டுள்ளது.

இரயில் பாதை அமைப்பதற்கு கூடுதல் வாய்ப்பாக மீளவிட்டான் முதல் ஸ்பிக் தொழிற்சாலை வரை தற்போது தனி பயன்பாட்டிற்கான இரயில் பாதை உள்ளது. ஆகவே ஸ்பிக்நகர் பகுதியிலிருந்து ஆறுமுகநேரி வரை 15 கி.மீ. தொலைவிற்கு பாதை அமைத்தால் போதுமானது. கோரிக்கை மனுவில் இந்த விபரம் கோடிட்டு காட்டப்பட்டுள்ளது.

உடன்குடி அனல்மின் நிலையம் செயல்படத் துவங்கியுள்ளது. குலசேகரப்பட்டணம் இஸ்ரோ ராக்கெட் ஏவுதளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தொழிற்சாலை பணியாளர்களுக்கும் பொது மக்களுக்கும் மற்றும் வட மாநிலங்களில் இருந்தும் தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் இருந்தும் திருச்செந்தூர் கோயிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கும், தூத்துக்குடி திருச்செந்தூர் இரயில் பாதை மிக அவசியமாகிறது. ஆகவே தூத்துக்குடி ஆறுமுகநேரி இரயில் பாதை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### ‘வந்தே மாதரம்’ பாடலின்

# 6 சரணங்களையும் கட்டாயமாகப் பாடும் உத்தரவை திரும்பப் பெற வேண்டும்!

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஜூலை 23 -

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் அதிகாரப்பூர்வ நிகழ்ச்சிகளில் ‘வந்தே மாதரம்’ பாடலின் ஆறு சரணங்களையும் கட்டாயமாக பாட அல்லது இசைக்க வேண்டும் என்ற முடிவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று தென் சென்னை மக்களவை தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மக்களவையில் விதி 377ன் கீழ் வலியுறுத்தினார்.

உள்துறை அமைச்சகத்தின் நடைமுறையின்படி, அரசு மற்றும் அதிகாரப்பூர்வ நிகழ்ச்சிகளில் வந்தே மாதரம் மற்றும் தேசிய கீதம் இசைக்கப்படும் போது, முதலில் வந்தே மாதரம், பின்னர் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும். மேலும், மாநிலத்திற்கு தனி மாநிலப் பாடல் இருந்தால், முதலில் மாநிலப் பாடல், அதன்பின் வந்தே மாதரம், இறுதியாக தேசிய கீதம் இசைக்கப்படும் நடைமுறை பின்பற்றப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு நிர்ணய சபை, வந்தே மாதரத்தின் முதல் இரண்டு சரணங்களுக்கு மட்டுமே தேசியப் பாடலுக்குச் சமமான அந்தஸ்தை வழங்கியிருந்தது என்றும், ஆறு சரணங்களையும் கட்டாயமாகப் பாட வேண்டும் என்ற எந்த சட்டமும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், மதச்சார்பின்மை, மொழிச் சுதந்திரம் மற்றும் தனிநபர் சுதந்திரம் ஆகியவை இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள் என்றும்,

முழு சரணங்களையும் கட்டாயமாகப் பாடுவது, குறிப்பாக ஏகத்துவக் கொள்கையைப் பின்பற்றும் முஸ்லிம்கள் மற்றும் பிற மதத்தினரின் மத நம்பிக்கைகளுடன் முரண்பாட்டை ஏற்படுத்துவதோடு, மதச் சுதந்திரம் மற்றும் மொழிச் சுதந்திரத்தையும் பாதிக்கிறது என்றும் தமிழச்சி தங்கபாண்டியன் எம்பி கூறினார்.

இந்தியாவின் ஒற்றுமை என்பது மதச்சார்பின்மை, மதப் பன்முகத்தன்மை மற்றும் மொழி மரபுகளின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. இவற்றை பலவீனப்படுத்தும் வகையில் அதிகாரப்பூர்வ நிகழ்ச்சிகளில் வந்தே மாதரத்தின் ஆறு சரணங்களையும் கட்டாயமாக பாட அல்லது இசைக்க வேண்டும் என்ற முடிவு, மதச்சார்பின்மை மற்றும் சமூக நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் ஒன்றிய அரசின் அதிகாரப்பூர்வ நிகழ்ச்சிகளில் வந்தே மாதரத்தின் முழு ஆறு சரணங்களையும் கட்டாயமாகப் பாட அல்லது இசைக்க வேண்டும் என்ற முடிவை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். மேலும், மாநிலங்களின் உரிமைகள், மொழிச் சுதந்திரம் மற்றும் நாட்டின் மதச்சார்பற்ற தன்மைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஒன்றிய அரசு தவிர்க்க வேண்டும் என்றும் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தினார்.

---

### வருகிற உள்ளாட்சித் தேர்தலில்

# நீலகிரி மாவட்டத்தில் தி.மு.க. வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வோம்!

## உதகை கிழக்கு நகர தி.மு.கழக செயல் வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

உதகை, ஜூலை 23 -

உதகை கிழக்கு நகர தி.மு.கழக செயல்வீரர்கள் கூட்டம் YMCA கூட்ட அரங்கில் (பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் அருகில்) மாவட்ட கழக பொறுப்பாளர் அண்ணன் கே. எம். ராஜூ அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நகர கழக செயலாளர் எஸ்.ஜார்ஜ் வரவேற்று பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் போஜன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார் மாவட்ட பொருளாளர் ஏ.நாசர் அலி,, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன் தம்பி இஸ்மாயில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் வாணிஸ்வரி மோகன் குமார் மகேஷ் உதகை மேற்கு நகர கழக பொறுப்பாளர் ரமேஷ் நகர அவைத்தலைவர் ஜெயகோபி,

நகர துணை செயலாளர்கள் கார்டன் கிருஷ்ணன், இச்சு பாய், ரீட்டா மேரி, நகரப் பொருளாளர் அணில் குமார், மாவட்ட பிரதிநிதிகள் வெங்கடேஷ், கார்த்திக், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் முஸ்தபா மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், கழக செயல் வீரர்கள், மகளிர் அணியினர் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

கூட்டம் நிறைவில் நகர அவைத்தலைவர் ஜெய கோபி நன்றி கூறினார்.

இக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இரங்கல் திர்மானம் 1வது வார்டு கிளைக் கழக செயலாளர் ரவி அவர்களின் தாயார் ஜெயாம்மா, 7வது வார்டு கிளை பிரதிநிதி லூயிஸ் அவர்களின் மனைவி சாந்தா, 6வது வார்டு மகளிர் அணி பிருந்தா அவர்களின் பாட்டி பாஞ்சாலி ஆகியோரின் மறைவிற்கு கூட்டம் இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் உதகை நகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் கழகம் அறிவிக்கும் கழக வேட்பாளர்களை கடந்த உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளை காட்டிலும் அதிக மான வாக்குகள் பெற்று வெற்றி பெறுவதற்கு அப்பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் செயல் வீரர்கள் அயராது பாடுபடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உதகை நகரில் உள்ள அனைத்து வார்டு கிளை கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள் அந்தந்த பகுதிகளில் கழகம் வலுப்பெற கழக கொடிகளை ஏற்றியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும் கழகப் பணிகள் தொய்வில்லாமல் நடைபெற பாடுபடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி நடைபெறுவதை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா நேரில் சென்று தரைத்தளம், கழிப்பறை வசதி, ஓய்வு அறை, கடைகளின் அமைப்பு, பேருந்து நிலையத்தின் முதல் தளம், ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குளாவதை கருத்தில் கொண்டு வடகிழக்குப் பருவ மழை துவங்குவதற்கு முன் பணியினை விரைந்து முடிக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆய்வுப் பணியில் மேயர் திலகவதி செந்தில், துணை மேயர் லியாகத் அலி, மாநகராட்சி துணைப் பொறியாளர் கலியகுமார், ஒப்பந்த பணி மேற்பார்வையாளர் மணிவேல், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

---

# நாடக வேசம் கூட வராது - நாளைய உலகம் உம்மை விடாது!

பிரதமரோ, முதல்வரோ பேசும் போது வெளிநடப்பு செய்வது உலக அளவில் ஏற்றுக்கொண்ட ஜனநாயக வழிமுறை.

அதை விடுத்து ‘நான் பேசும்போது, கதவைங் பூட்டுவேன்’ என்பது சர்வாதிகாரம். சர்வாதிகாரத்தை எதிர்ப்பதற்கு அடையாளமாக ‘உடைப்பேன்’ என்றால் கை உடைந்து விட்டதா? கொத்துப் பரோட்டா என்பது ஜனநாயகச் சொல்லா? தீ என்றால் நாக்கு சுட்டுவிடுமா?

ஒரு காலத்தில் ஜெயலலிதா தான் மதுராந்தகம் சொக்கலிங்கம், தூத்துக்குடி ரமேஷ், ராணிப்பேட்டை மோகன் என தனது சொந்தக் கட்சி எம்.எல்.ஏ.களையே குறிவைத்து தாக்கினார். அரசுக்கு எதிராகச் சென்றதால் வழக்கறிஞர் சண்முகசுந்தரம், வழக்கறிஞர் விஜயன் ஆகியோர் தாக்கப்பட்டார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா முகத்தில் ஆசீட் வீசப்பட்டது.

அந்த வரிசையில் அனிதா ராதாகிருஷ்ணன், விளாத்திகுளம் மார்க்கண்டேயன் என விரிகிறது.

ஜெயலலிதா பாணியில் ஆட்சி நடத்த துடிக்கும் நீங்கள், அமைச்சரின் மனைவி, உதவியாளர் மனைவியுடன் நெருக்கம் என புகார் வந்தவுடன் அந்த அமைச்சரையே கோட்டையை விட்டு விரட்டினார் ஜெயலலிதா. சசிகலா புஷ்பா நடவடிக்கை தவறுக்காக கட்சியை விட்டும் நீக்கினார் ஜெயலலிதா.

ஆனால் ஒரு மாதமாகியும் தன்னைக் கெடுக்க அழைத்து வரச் சொன்னதே சரவணன் தான் எனச் சொல்லியும், இதுவரை சரவணன் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்?

‘அரசு வழக்கறிஞர் பதவிக்கு என்னிடம் 20 லட்சம் கேட்கிறார்கள்’ என த.வெ.க. கட்சியின் நிர்வாகி ஞானசௌந்தரி சொல்லியும் என்ன நடவடிக்கை எடுத்தார்கள். ஜெயலலிதா மாதிரியே ஆண்டால், ஜெயலலிதா மாதிரியே சிறைக்குப் போக வேண்டியது தான்.

‘முட்டாள் முதலமைச்சர்’ என பேசிய ஆறு மாதத்தில், ‘யார் ரௌடி என்பது தெரியும்’ என்று மிரட்டிய ஆதவ் மீது,

‘காவல்துறை தான் 41 பேர் இறந்ததற்கு காரணம்’ என்று சொன்ன விஜய் மீது -

‘செந்தில் பாலாஜி பல்லை உடைப்பேன் சொன்ன அண்ணாமலை மீது நாக்கை அறுப்பேன்’ என்று

முதல்வர் விஜய் நடவடிக்கை எடுப்பாரா?

கட்டையைத் தூக்கிக் கொண்டு அடிப்பதற்கு அலைந்தவர் அமைச்சராக இருக்கலாமா?


பெண் பாலியல் செய்த அமைச்சர் பதவியில் நீடிக்கலாமா?

பெண் குழந்தைகளை அவமானப்படுத்த வீடியோ கேமரா உடன் சென்று அமைச்சர் பதவியில் நீடிக்கலாம். வெளியில் உளவலாம்.

ஆனால் நீதி கேட்ட நேதாஜிக்கு சிறையா?

பிடிக்கப்பட வேண்டியவர்கள் - உள்ளே இருக்க வேண்டியவர்கள் வெளியே. பாராட்டுக்குரியவர்கள் உள்ளேயா? எத்தனை நாள் நீடிக்கும் இந்த ஆட்சி?

ஒரு பாரசீக கவிஞன் பனிபடர்ந்த மலையில் ஜோல்னா பையுடன் போகும்போது நாய் ஒன்று குரைத்ததாம். நாயை அடிக்க கவிஞன் குனிந்தால் கற்கள் பனியில் மூடப்பட்டிருந்தது. கவிஞன் சொன்னான், இந்த நாட்டில் நாய்களை அவிழ்த்துவிட்டு, கற்களை கட்டி இருக்கிறார்களே என்று, அது தமிழ்நாட்டிற்குப் பொருந்தும்.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

கடைசியாக திரைப்படப் பாடல் ஒன்று கண்ணதாசன் வரிகள்

சதிகார கூட்டம் ஒன்று சபையேறக் கண்டேன்

தவறென்று (மார்க்கண்டேயனை) என்னைச் சொல்லும் பரிதாபம் கண்டேன்

அழகாகத் தோன்றும் ஒரு கருநாகம் கண்டேன்

அநியாயம் செய்வோருக்கும் மரியாதை கண்டேன்

நாடக வேஷம் கூட வராது - நாளைய உலகம் இவரை விடாது,

---

### வேப்பூர் வட்டாரத்தில் தடை செய்யப்பட்ட குட்கா – புகையிலைப் பொருட்களை

# விநியோகம் செய்த த.வெ.க. பெண் நிர்வாகியின் கணவர்!

## வேப்பூரில் பரபரப்பு!

கடலூர் ஜூலை 23 -

கடலூர் மாவட்டம் வேப்பூர், மங்கலம் பேட்டை, திட்டக்குடி, பெண்ணாடம் போன்ற பகுதிகளில் தடை செய்யப்பட்ட புகையிலை (ஹான்ஸ்) பாக்கெட்டுகள் சரளமாகக் கிடைக்கின்றது என்று காவல்துறைக்கு தகவல் கிடைத்ததின் பெயரில் போலீசார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்பொழுது வேப்பூர் அருகில் உள்ள நாரையூர் கிராமத்தைச் சார்ந்த சடையமுத்து என்பவர் வெளியூர்களிலிருந்து தடை செய்யப்பட்ட குட்கா - புகையிலை (ஹான்ஸ்) பாக்கெட்டுகளை மொத்தமாக வாங்கி வந்து வேப்பூரில் உள்ள தனது வீட்டில் வைத்து வேப்பூர் வட்டாரத்தில் உள்ள பெட்டிக் கடைகளில் மொத்தமாக விற்பனை செய்து வருகிறார் என்பது போலீசாருக்கு தகவல் கிடைத்துள்ளது.



தகவலின் பெயரில் போலீசார் விசாரித்ததில் கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றிய த.வெ.க. மகளிர் அணி அமைப்பாளர் திருமதி. ஜோதியின் கணவர் சடையமுத்து என்று தெரியவந்துள்ளது.

தனது மனைவி ஜோதி வேப்பூர் வட்டாரத்தில் த.வெ.க பெண் நிர்வாகி என்பதை வைத்துக் கொண்டு தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை சரளமாக விற்பனை செய்து வந்துள்ளார்.



உடனே வேப்பூரில் உள்ள ஜோதியின் வீட்டிற்கு போலீசார் வந்தனர். போலீசாரைஜோதியின் கணவர் சடையமுத்து பார்த்ததும் தப்பித்து ஓட முயற்சித்துள்ளார். அப்பொழுது போலீசார் சடையமுத்துவை மடக்கிப் பிடித்து தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

அப்பொழுது சடையமுத்து தனது மனைவி ஜோதி நல்லூர் வடக்கு ஒன்றிய த.வெ.க. மகளிர் அணி அமைப்பாளர் என்றும் நாங்கள் ஆளுங்கட்சி என்றும் போலீசாரிடம் வாக்குவாதம் செய்து உள்ளார்.

அப்பொழுது சடையமுத்துவின் வீட்டில் ஏழு சாக்கு மூட்டைகளில் தடை செய்யப்பட்ட புகையிலை (ஹான்ஸ்) பாக்கெட்டுகள் சுமார் 34 கிலோ பறிமுதல் செய்தனர். தான் செய்த தவறினை சடையமுத்து ஒப்புக் கொண்டதால் அவரை காவல் துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

த.வெ.க. பெண் நிர்வாகி ஜோதியை அப்பகுதி மக்கள் “குட்கா ராணி” என்றும் “ஹான்ஸ் ராணி” என்றும் வேப்பூர் பகுதியில் உள்ள பெட்டிக்கடை உரிமையாளர்கள் அழைப்பார்களாம்.

இதுவெல்லாம் த.வெ.க. ஆட்சியில் சாதாரண விஷியம்தானே என்று பொது மக்கள் கருத்து தெரிவிக்கின்றார்கள்.

---

### கழக விவசாய அணி துணைச் செயலாளர்

# வி.என்.மணி மனைவி எம்.அலமேலு மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

புதுக்கோட்டை, ஜூலை 23 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், கழக விவசாய அணி துணைச் செயலாளர் வி.என்.மணி அவர்களின் மனைவி எம்.அலமேலு அவர்கள் நேற்று முன்தினம் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம் மட்டையன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த, கழக விவசாய அணி துணைச்செயலாளர் வி.என்.மணி அவர்களின் மனைவியார் திருமதி எம். அலமேலு அம்மாள் அவர்கள் நேற்று முன்தினம் (21.07.2026) மாலை இயற்கை எய்தினார்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

அம்மையாரது இறுதி ஊர்வலம், நல்லடக்கம் இன்று (22.07.2026 புதன்கிழமை) பிற்பகல் 3.00 மணியளவில் மட்டையன்பட்டி அம்மையாரது இல்லத்திலிருந்து நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.




உதகை கிழக்கு நகர தி.மு.கழக செயல்வீரர்கள் கூட்டம் YMCA கூட்ட அரங்கில் (பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் அருகில்) நகரச் செயலாளர் எஸ்.ஜார்ஜ் முன்னிலையில் மாவட்டக் கழக பொறுப்பாளர் கே. எம். ராஜு தலைமையில் நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.